RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt21118

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

தந்தை பெரியாரின் பார்வையில் பிற காப்பியப் பெண்மாந்தர்கள்

ப. கமலக்கண்ணன் [அ,*]

[அ] தமிழ்த்துறை, சிக்கய்ய நாய்க்கர் கல்லூரி, ஈரோடு-638004, தமிழ்நாடு, இந்தியா

Women of the other Epics in view of Periyar

P. Kamalakannan [a,*]

[a] Department of Tamil, Chikkaiah Naicker College, Erode-638004, Tamil Nadu, India.

* Corresponding Author:
kamalan1964@gmail.com

Received : 31-07-2020
Accepted : 03-01-2021

ABSTRACT

As English has its influence throughout the world, most of Shakespeare's works became famous. Even then, one can challenge that so far no one has written anything which can beat down the classical epics and Idhikāsams. There is no much difference between men and women in nature. Both are similar in aesthetics, knowledge, character etc. The respect given to women during Sangam period has got changed. They were refused of their rights in the later literature and in the minds of the poets. The chaste women in the Tamil epics were obedient to their husbands, and on one would have ever questioned their husbands. Akalyai, who accidently lost her chastity is also included in the list of chaste women. Panchali, who is referred as Draupathi, Krishnai, Indhirasenai, Thrihayani is the heroine of Vyasar's Maha Bharatham, won by Arjuna in Swayamvaram, she became wife of five Pandavas on the words of Kunthi. She appealed to Kannan to safeguard her during the abuse happened to her by Dushyasana, in Dhruyodhana's court when the game of dice was challenged to her husband. Sita, the heroine of Ramayana is adored as the 'fire of chastity', 'ornament of chastity' etc. Though Mandodhri condemns her husband's activities, she is also added to be one among the chaste women as she died immediately following her husband's death. Periyar appreciates only certain heroine who parallels his ideologies of reasoning, discipline and self-respect and criticizes others.

Keywords: Tamil Epics, Draupathi, Classical Epics, Indhirasenai, Periyar.

ஆசிரியர் குறிப்பு

முனைவர் ப. கமலக்கண்ணன், கால் நூற்றாண்டு காலமாக கல்லூரிப் பணியில் தடம் பதித்து வருபவர். ஈரோடு சிக்கய்ய நாய்க்கர் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவரான இவர் சிறார் பருவம் முதல் பகுத்தறிவுச் சிந்தனையாலும் தந்தை பெரியாரின் கொள்கையாலும் ஈர்க்கப்பட்டுத் தொடர்ந்து செயலாற்றி வருபவர். தன்னம்பிக்கை, சுயசிந்தனை, தன்மதிப்பு இவைகள் மூன்றும் தான் தமிழனை உலக அளவில் தலைநிமிரச் செய்யும் என்னும் எண்ணங் கொண்டவர். இவர் ஆசிரியப் பணியோடு பல்வேறு பல்கலைக் கழகங்களில் ஆய்வு மேற்கொண்டு வரும் இளம் முனைவர், முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கு நெறியாளராகப் பணியாற்றி வருகிறார்.

தொடர்ந்து தொய்வில்லாமல் எத்தகைய சமுதாயப் பணிகளையும் ஏற்றுக் கொண்டு அவற்றைத் திட்டமிட்டு செயல்படுத்துவதில் அதிக ஈடுபாடு உள்ளவர்.

முன்னுரை

உலகளவில் ஆங்கிலத்தின் தாக்கம் இருப்பதால் சேக்ஸ்பியரின் படைப்புகள் பலவும் புகழ் பெற்று விளங்கின. ஆயினும் செம்மொழி காப்பியங்கள் இதிகாச காப்பியங்களை விஞ்சுவதற்கு உலகில் இன்னும் யாரும் படைக்கவில்லை எனலாம் (Subramanian, 2013). இதிகாச காப்பியங்களில் இடம்பெற்ற சில பெண் மாந்தர் படைப்புக்களைச் சமுதாய சீர்திருத்தவாதியான தந்தை பெரியார் அவருக்கே உரித்தான முறையில் திறனாய்வு செய்து தனது ஆய்வு மானப்பான்மையை அவ்வப்போது வெளிப்படுத்தியுள்ளார்.

பெரியார் தனக்குத் தெரிந்த அறிந்த இலக்கியங்களிலிருந்து சில பெண் மாந்தர் படைப்புகள் குறித்த கருத்துகளைத் தனது பேச்சிலும் எழுத்திலும் வெளிப்படுத்தியுள்ளார். அவற்றையெல்லாம் பெண் மாந்தர்கள் என்ற தலைப்பில் இந்த இயலில் எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. பெரியார் சிலப்பதிகாரம், கம்பராமாயணம், மகாபாரதம் போன்ற காப்பியங்களின் பாத்திரப்படைப்புகளைக் குறித்துத் தனித்தனியே கருத்துகளை வெளிப்படுத்தினாலும் பதிவிரதைகள் என்றும் கற்புக்கரசிகள் என்றும் சமுதாயத்தில் அங்கீகரிக்கப்பட்ட,

- அகலிகை
- திரவுபதி (அ) திரௌபதி
- சீதை
- மண்டோதரி

போன்ற பெண் மாந்தர்களின் கற்புத் தன்மைகளைப் பற்றி முழுமையாக ஆராய்கிறார்.

“கற்பிக்கப் பெறுதலால் இப்பெயரினைக் கொண்டது. ஆன்றோராலும் பலராலும் கற்பிக்கப் பெறும் மனத்தூய்மை, மனத்திண்மை, சொற்றிறம்பாவை முதலியவை எய்தப் பெறுவதால் இப்பெயரினைப் பெற்றது” எனவே கற்பு எனும் சொல் ஒரு பரந்து பட்ட பொருளுடைய சொல்லாக ஆளப்படுகின்றது (Periyar, 2007; Periyar, 2018) .

கற்பு என்பதற்குப் பெரியார் தரும் விளக்கம்

கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை என்கிற வாக்கியப்படி பார்த்தால் கற்பு என்பது சொல் தவறாமை அதாவது நாணயம், சத்தியம், ஒப்பந்ததிற்கு விரோதமில்லாமல் என்கிற கருத்துகள் கொண்டதாக இருக்கிறது.” “கற்பு என்பது பெண்களுக்கு மாத்திரம் சம்பந்தப்பட்டது என்பதற்குத்தக்க ஆதாரம் கிடைக்காவிட்டாலும் அழிவில்லாதது, உறுதியுடையது என்ற பொருள்களே கிடைக்கின்றன” என்று கற்பு என்பதற்குப் பொருளையும் உரைத்துவிட்டு அது பெண்களுக்கு மட்டுமல்ல ஆண் பெண் இருபாலாருக்கும் பொதுவானது என்றும் கருதுகிறார்.

"ஆரிய பாஷையில் பார்க்கும்போது மாத்திரம் கற்பு என்கின்ற பதத்திற்குப் பதிவிரதை என்கின்ற பொருள் கொள்ளப்படுகின்றது. இந்த இடத்தில் தான் கற்பு என்கிற வார்த்தைக்கு அடிமைக் கருத்து நுழைக்கப்படுகின்றது" என்பது தனது அபிப்பிராயம் என்று பெரியார் கூறுகிறார்.

"பதியைக் கடவுளாகக் கொண்டவள், பதிக்கு அடிமையாய் இருப்பதையே விரதமாகக் கொண்டவள், பதியைத் தவிர வேறு யாரையும் கருதாதவள் எனப் பொருள் கொடுத்திருப்பதுடன், 'பதி' என்கின்ற வார்த்தைக்கு அதிகாரி, எஜமான், தலைவன் என்ற பொருள்கள் இருப்பதால் அடிமைத் தன்மைகளை இந்த வார்த்தைகள் பலப்படுத்துகின்றன" என்று பதிவிரதைக்கு விளக்கமளிக்கிறார்.

இயற்கையின் உருவாக்கத்தில் ஆடவர்க்கும் மகளிருக்கும் அதிகமான வேற்றுமைகளில்லை, அழகுணர்வு, அறிவு, பண்பு போன்ற அனைத்து வகையிலும் இருபாலரும் ஒத்திருக்கக் காண்கிறோம். இதனைத் தொல்காப்பியர்,

"பிறப்பே குடிமை ஆண்மை யாண்டோடு
உருவு நிறுத்த காம் வாயில்
நிறையே யருளே யுணர்வோடு திருவென
முறையுறக் கிளந்த வொப்பினது வகையே"

என இருவருக்கும் பொதுவான இயல்புகள் பத்தையும் சுட்டிக் காட்டுகிறார். பெண்பாற் புலவர் அவ்வையாரின்,

"செல்வா ரல்லரென்றி யரினகழ் தனெனே

ஒவ்வாஒ ல்ல ளென்றிவரி கழந்தனரே

ஆயிடை, இருபேராண்மை செய்த பூசல்

நுல்லராக் கதுவியாங்கென்

அல்லல் னெஞ்ச அகலமலக் குறுமே"

என்ற பாடலும் 'ஆண்மை' என்பது ஆடவர். மகளிர் ஆகிய இருபாலருக்கும் பொதுவானது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. மேலும் வாழ்க்கையில் ஆடவர் மகளிர் ஆகிய இருவரின் சமநிலை உணர்ந்தே வள்ளுவர் "வாழ்க்கைத்துணை நலம்" என்று பெண்ணைச் சிறப்பித்தார். ஆனால் இடைக்காலத்திலிருந்து பெண்கள் குறித்த சிந்தனையில் பெரிய மாற்றம் ஏற்படுவதை நம்மால் உணர முடிகிறது.

சங்க காலங்களில் பெண்களுக்கு அளிக்கப்பட்ட உயர்வானது பிற்காலங்களில் தோன்றிய இலக்கியங்களிலும் கவிஞர்களின் சிந்தனைகளிலும் மாற்றம் பெற்று அவர்களின் உரிமைகள் மறுக்கப்படுவதைக் காண்கிறோம்.

"பெண்டிரு முண்டியு மின்ப மென்றுலகிற்
கொண்டோ ருறூஉங் கொள்ளத் துன்பம்"

என்று துன்பத்தைத் தோற்றுவிக்கும் பொருளில் ஒன்றான மகளிரை இளங்கோவடிகள் கருதினார்.

"பெண்ணறி வென்பது பேதை மைத்தே"

என்ற தொடரும்,

"பெண்ணாகி வந்த தொரு மாயப் பிசாசும்"

என்ற தொடரும் பிற்கால மகளிரை வெறுத்து ஒதுக்கும் இழிநிலை எனலாம். மேற்கூறிய இதே நிலைதான் வருணாசிரமதரும காலத்திலும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டிருப்பதாக நமக்கு இலக்கியச் சான்றுகள் பகர்கின்றன.

ஒரு பெண்ணிற்கு இரு கணவர் உண்டு. ஒருவன் மணம் புரிந்து கொண்டவன். மற்றொருவன் கருவுறுமாறு செய்பவன்" என்று கூறப்படும் வரிகள் பெண்டிர் நிலையானது அக்காலச் சமுதாயத்தில் எவ்வாறு தாழ்வுற்றிருந்தது என்பதைத் தெரிவிக்கின்றது.

தமிழ்க் காப்பியங்களில் வரும் பதிவிரதைகள் அத்தணைப் பேரும் கணவனின் சொல்கேட்டு நடந்தவர்கள்தான். ஒரு பதிவிரதைகூடத் தன் கணவனை எதிர்த்துக் கேட்டிருக்கமாட்டாள். தன் கணவன் தன்னை நடத்துவது காட்டுமிராண்டித்தனமும் அறிவுக்குப் பொருத்தமற்றதுமாக இருக்கிறதே என்று சிந்தித்துக்கூட பார்த்திருக்க மாட்டாள்" பெண்கள் காப்பிய காலங்களில் கணவனின் விருப்பத்திற்கான சாதனமாகவே இருந்துள்ளார்கள் என்று பெரியார் தமது கருத்துகளை முன் வைக்கிறார்.

அகலிகை

சந்தாப்பச் சூழல் காரணமான ஒழுக்கம் தவற நேரிட்ட அகலிகையும் அய்ந்து பத்தினியருள் ஒருத்தியாக உலக வழக்கில் எண்ணப்படுகிறாள். நெஞ்சினாற் பிழைப்பிலாதாள், என்று கம்பரால் போற்றப்பெற்றுக் கல்லாய்க் கிடந்து சாப விமோசனம் பெற்ற அகலிகையின் வரலாறு கற்பொழுக்கம் பற்றி கோட்பாடுகளில் குறிப்பிட்டத்தக்க இடம் பெறுகிறது.

"இந்திரன் பூசையிவள் அகலினை இவன்
சென்ற கௌதமன் சினனுறக் கல்லுரு
ஒன்றிய படியிது"

என்ற பாடல் வரிகளின் மூலம் இந்திரன் பூனை வடிவத்தில் வந்தது, கௌதமன் அகலிகையைச் சபித்தது, அகலிகை கல்லாகியது ஆகிய குறிப்புகள் மூலம் புலனாகின்றன. "அகலிகை மூவாயிரம் ஆண்டுகளாகப் புதிதுபுதிதாகப் படைக்கப்பட்டிருக்கிறாள். 'கற்பு' குறித்த கருத்து மாற்றங்கள், சிந்தனைப் போராட்டங்கள் அகலிகையின் இயல்பமைப்பைப் பெரிதும் மாற்றமடையச் செய்துள்ளன" என்ற கருத்துகளுக்கு முரண்பாடான ஒரு நிலையைப் பெரியாரிடம் காண முடிகிறது.

“அகலிகை என்பவள் கௌதம முனிவரின் பெண்சாதி, தெய்வராசாவான இந்திரன் இந்த அம்மாள் மேல் ஆசைப்பட்டு மாறுவேடம் பூண்டு வீட்டிற்குள் நுழைந்ததாகவும் பிறகு ஒருவருக்கொருவர் இன்னார் என்று தெரிந்து கொண்டு இரண்டு பேரும் சுகித்ததாகவும், ரிஷிக்கு இந்த செய்தி தெரிந்து இருவரையும் தண்டித்ததாகவும், அந்தத் தண்டனையால் இந்திரனுக்குச் சரீரமெல்லாம் பெண் குறியாகவும், அகலிகை கல்லாகவும் ஆகிவிட்டதாகவும் கதை உள்ளது”.

இவ்வாறு தேவர்களுக்கெல்லாம் தலைவனாய் இருக்கும் இந்திரனின் பண்பும், பத்தினியாகப் போற்றப்படும் அகலிகையின் தன்மையும் அய்யப்பாட்டுக்குரியதாகப் பெரியார் எடுத்துரைக்கிறார். “வான்மீகி காட்டும் அகலிகை கவுதம முனிவரைப் போல வேடம் தரித்து வந்த இந்திரனை, அவன் இந்திரன் என்பதைத் தெரிந்தும் மிக விருப்பத்தோடு காம இன்பம் அடைந்ததாகக் கொச்சைப் படுத்திக் காட்டுகிறார்” இந்தக் கருத்து பெரியாரின் கருத்துக்கு உடன்பாடாகவே தோன்றுகிறது.

அகலிகையின் கற்பு குறித்து முன்னர் கம்பரும், பின்னர் சிவபுராணம் முதலிய புராணங்களும் அண்மைக் காலங்களில் சி.கே.சுப்ரமணிய முதலியார், கு.ப.ராஜகோபாலன் மற்றும் புதுமைப்பித்தன் போன்றவர்களும் ஆய்வு செய்துள்ளனர். மேலும் கம்பர் காலத்துக் காப்பிய அகலிகை கால மாற்றத்திற்கு ஏற்பச் சிறுகதை, நாவல் போன்ற இலக்கியங்களில் பல்வேறு பரிணாம வளர்ச்சியைப் பெற்றிருக்கின்றாள்.

திரவுபதி

பாஞ்சாலி, திரௌபதி, கிருஷ்ணை, இந்திரசேனை, திரிஹாயனி என்று பலவாறாக அழைக்கப்படும் இவள் வியாசரால் எழுதப்பட்ட மகாபாரதக் காவியத்தின் தலைவியாவாள், அருச்சுனனால் சுயம்வரத்தில் கொண்டு வரப்பட்டுக் குந்தியின் கட்டளைப்படி அய்வரையும் மணந்து சுகத்துடன் இருக்கையில் தன் கணவன் சூதாடிய காலத்தில் அடிமைப்பட்டபோது துரியோதனனின் சொற்படி துச்சாதனன் துகில் உரியும்போது காப்பாற்றக் கண்ணனை வேண்டியவள்.

இதிகாசங்களான இராமாயணமும் பாரதமும் இன்றுவரை பாரம்பரியமாகப் போற்றப்பட்டு வருகின்றன. “பாரதக் கதையில் பாண்டவர்கள் சாதாரண மனிதர்களாகவே குறிக்கப்பட்டுள்ளார்கள். அதில் வரும் கிருஷ்ணனுக்கு மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்ட அசாத்தியமான அற்புதமான காரியங்கள் பல சேர்க்கப்பட்டிருக்கின்றன” என்று கூறும் பெரியார் பாரதக் கதைத் தலைவியான திரவுபதியின் இயல்பைப் பின்பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்.

“திரவுபதை முதலில் ஒரு புருஷனை மாத்திரம் கட்டிக் கொண்டு பிறகு மாமியார் இஷ்டப்படி மற்றும் நால்வருக்கும் பெண்டாட்டியாக இருந்து வந்திருக்கிறாள். அய்ந்து பேர்களிருந்தும் ஆசை தீராமல் இன்னொரு புருஷனை நினைத்து வருந்தியிருக்கிறாள் என்பதைத் தானே ஒப்புக் கொண்டதோடல்லாமல் உலகில் பெண்கள் பதிவிரதைகளாக

இருக்க வேண்டுமானால் ஆண் மக்களே இருக்கக் கூடாது என்றும் தீர்ப்பு கூறினாள்" என்பதைக் காப்பியத் தலைவியின் நிலையாக எடுத்துக் கூறி அந்தக் காலப் பெண்களின் நிலையானது சமுதாயத்தில் மிகவும் இழிவாகக் கருதப்பட்டுள்ளது என்பதையும் ஆணாதிக்கத்தின் கொடுமை அதிகரித்திருந்து என்பதையும் இதன் மூலம் பெரியார் எடுத்துக் கூறி விளக்குகிறார்.

"பாஞ்சாலி அய்வருக்கும் மனைவி, இவளுக்கு 5 கணவர்கள் இருக்கவும் இன்னும் வேறொருவனை இவள் உள்ளம் விரும்புவதாக வில்லிப்புத்தூரார் பாரதம் வருணிக்கிறது"41 என்ற கருத்தும் எண்ணத் தகுந்தாகும்.

அடிமைச் சமுதாயத்தில் பெண்களின் நிலை எத்தகு இழிநிலையுடைதாக இருந்தது என்று காலம் நமக்கு உணர்த்தும் கதைப் பாத்திரமே பாஞ்சாலி என்பது உண்மையாகும்.

"மகாபாரதக் கதையில் அழகி பாஞ்சாலி 'அய்வருக்கு மனைவி', 'அழியாத பத்தினி' என்பதாகப் புகழப்படுகிறாள். அய்ந்து சகோதரர்களும் ஏதோ ஒற்றுமையாகக் கனியொன்றைப் பங்கு போட்டுக் கொள்வதைப் போல கன்னியைப் பங்கு போட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆண் இருதார மணம் புரிவது சட்ட விரோதம் என்றால் பெண் அய்வரை மணந்துகொள்வதும், அதனாலேயே அவள் 'பத்தினி' என்று போற்றப்படுவதும் எந்தவிதத்தில் நாகரிகம்?" இதன் மூலம் அந்தக் கால நிலவுடைமைச் சமுதாயத்தின் சூழல் எவ்வாறு அமைந்திருந்தது என்பது நமக்குத் தெரிகிறது. எனவே நிலவுடைமைச் சமுதாய அமைப்பை நோக்கிப் பரிணமித்துக் கொண்டிருந்த அடிமைச் சமுதாயத்தில் இத்தகைய குடும்ப முறைமை இருந்ததாகத் தெரிகிறது.

சீதை

இராமாயணத்தின் தலைவி சீதையைப் பற்றி, 'கற்பின் கனலி', 'கற்பினுக்கணி' கற்பினுக்கு அரசி கல்லொடும் தொடர்ந்த நெஞ்சம் கற்பின் மேல் கண்டதுண்டோ" என்றும் கூறப்படுகிறது.

காதலித்தவனைக் கைப்பிடித்தல், கணவனின் இன்ப துன்பங்களில் பங்கு கொள்ளல், பிறனால் கவரப்பட்ட நிலையிலும் கற்பு நெறி தவறாமை, இயற்கையையும் ஆற்றல் கொள்ளும் வலிமை, இராவணனை இராமன் வென்ற பிறகு தீக்குளித்துத் தன் கற்பின் சிறப்பைப் புலப்படுத்தியமை போன்ற பல்வேறு செயல்களின் மூலம் கம்பர் சீதையின் இயல்புகளைச் சுட்டிக் காட்டுகிறார். ஆனால் வான்மீகியோ சீதையைத் தன் பண்பிற்கு ஒவ்வாத நிலையில் படைத்துள்ளார்.

"மாயமானைத் தேடிச் சென்ற இராமன், இலக்குவனைச் சீதைக்கு காவலாக வைத்துவிட்டுச் சென்றான். காவலாக நிற்கும் இலக்குவனை நோக்கி, என்மேல் வைத்த ஆசையால் இராகவரைத் தேடிச் செல்லவில்லை என்றும் இராகவரைக் கணவராகப் பெற்ற நான் இன்னொரு கணவரைக் கருதுவேனோ என்றும் கெட்டவரே! கருணையற்றவரே என்றும்

இலக்குவனைக் கூறும் கூற்றுகள் சீதையின் பாத்திரப் பண்பிற்கு ஒவ்வாத கூற்றுகளாகும்." என்ற கம்பரை வடமொழிப் புலவர் வான்மீகியோடு ஒப்புநோக்கிக் கூறுகின்ற இந்தக் கருத்துக்கு உடன்பாடான கருத்துகளையே பெரியாரும் எண்ணுகிறார்.

"திருமணமான சிறிது நாட்களிலேயே பரதனால் வெறுத்து ஒதுக்கப்பட்டாள்" இராவணன் மாளிகைக்குச் சென்றபோது மோகம் கொண்டுவிட்டாள், கணவனை அற்பன் என்கிறாள்." எனவே சீதை தன் கணவனை மதிக்காதவளாகவும், பரதனின் வெறுப்புக்கு ஆளாகியவளாகவும் விளங்கியதாகக் கூறும் பெரியாரின் கருத்துகள் வால்மீகியைப் பின்பற்றிக் கூறப்பட்ட கருத்துகளாகும்.

"சீதை இராவணன் உருவம் தீட்டிய விசிறியை மார்பின் மீது வைத்து அணைத்தபடி தூங்கிக் கொண்டிருந்தாள்". இவ்வாறு வால்மீகியின் படைப்பிற்கும் கம்பரின் படைப்பிற்கும் மிகுந்த வேறுபாடு உள்ளது என்பதைப் படிக்கும் எவருக்கும் நன்கு விளங்கும். தாரை வாயிலாகக் கணவன் இறந்தபோது கைம்பெண்ணாகக் கோலம் பூண்டு ஒழுகுதல் என்பதை கற்பின் விளக்கமாகக் கூறுகிறார். மேலும் தாரையைப் பற்றிய செய்திகள் பெரியாரின் கருத்துகளில் அதிகமாக இடம் பெறவில்லை.

மண்டோதரி

மண்டோதரி வாயிலாகத் தன் கணவன் செய்யும் தவறான செயல்களைக் கடிந்தாலும் தன் கணவன் இறந்தவுடன் தானும் இறந்தமையால் கற்புக்கரசியருள் ஒருத்தியாக மதிக்கப்படுகிறாள். அகலிகை, சீதை போன்ற பல பாத்திரப் படைப்புகளையெல்லாம் வால்மீகி ராமாயணத்திலிருந்து எடுத்துக்காட்டிய பெரியார் சற்றே மாறுபட்டு மண்டோதரியை மட்டும் கம்பனிலிருந்து விளக்குகிறார்.

"மண்டோதரி விஷயத்தில் ஒரு தகராறையும் காணோம். கம்பராமாயணத்தில் புருஷன் பிரிந்தவுடன் செத்துவிட்டான்' என்று தெரிந்தவுடன் அழுதுவிட்டதாகக் காணப்படுகிறது. இவள் கற்புள்ள பெண் என்றே சொல்லாம்"

"என்ற ழைத்தன ளேங்கி யெழுந்தவன்
போன்ற ழைத்த பொருவரு மார்பினைத்
தன்ற ழைக்கைக ளாற்றழு வித்தினி
கின்றற றழைத்துயிர் தாளுயிர் நீங்கினாள்"

இராவணன் இறந்துபட்டான் என்பதனை எண்ணி விம்மி விம்மி அழுதாள். தன் கரங்களால் அவன் மார்பினைத் தழுவினாள். தழுவியவள் தன்னுயிரை நீக்கினாள். ஆனால் "வான்மீகியில் இராவணனின் இறந்த செய்தி கேட்ட மண்டோதரி கலங்கிய நெஞ்சினளாய் வாய்விட்டு அலறினாள்.உன்னோடு நானிறக்கவில்வையே என்று வருந்தி, துயரம் மிக்கவளாய்க் கதறும் மண்டோதரியை மற்ற மனைவியர் அரண்மனைக்குச் செல்வது போலவே மாணிக்கவாசகரின் பாடல் ஒன்று காணப்படுகின்றது.

“ஏர்தரும் ஏழுகேத்த எவ்வுருவுந் தன்னுருவாய்
ஆர்கலிசூழ் தென்னிலங்கை அழகமர் வண்டோதரிக்குப்
பேரருள் இன்பம் அளித்த பெருந்துறை மேய பிரானைச்
சீரிய வாயாற் குயிலே தென்பாண்டி நாடனைக் கூவாய்”

என்ற இந்தப் பாடலின் மூலம் மண்டோதரி பெருமை உடையவள் என்றும் புலனாகிறது. “இராவணுடைய பட்டமகிரிஷி மண்டோதரி அசுர தச்சனான மயனுடைய மகள் அழகில் சிறந்தவள். மண்டோதரி பஞ்ச கன்னிகளுள் ஒருத்தியாக எண்ணப்படுகிறாள்.” என்று வடமொழி இலக்கியங்கள் புகழ்வதாகக் கூறுகிறார். மேற்கூறிய பஞ்ச கன்னிகளுள் அகலினை, திரவுபதி, சீதை போன்ற மூன்று பெண்களின் இயல்பையும், தன்மையையும் குறை கூறும் பெரியார் மண்டோதரி, தாரை இருவரை மட்டும் குற்றமற்றவள், கற்புடையவள் என்பன போன்ற உடன்பாடான கருத்துக்களைக் கொண்டுள்ளார்.

முடிவுரை

பெரியாரின் ஆய்வு மனப்பான்மையானது குறிப்பிட்ட ஒரு வரையறையை உருவாக்கிக் கொண்டதாகவும், தனது இயக்கக் கொள்கைகள், கோட்பாடுகளான பகுத்தறிவிற்கும், ஒழுக்கத்திற்கும், சுயமரியாதைக்கும் ஒத்துப் போகின்ற படைப்புகளை மட்டும் உயர்த்தியும் மற்றவற்றைக் குறை கூறியும் தனது கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளார். உலகளவில் போற்றப்படும் இதிகாசங்களில் இடம்பெற்றுள்ள சில பெண் பாத்திரப் படைப்புகளை திறனாய்வு செய்துள்ள பெரியாரின் மனப்பான்மையானது சமூக சீர்த்திருத்ததைப் போலவே படைப்புகளையும் சீர்திருத்தும் மனப்பான்மை கொண்டதாக உள்ளது.

References

Periyar E.V.R., (2007), Notes on Ramayanam – periyar dravidar kazhagam, Chennai, India.

Periyar E.V.R., (2018), Ramayana Paaththirangal, Logital Books, India.

Subramanian, A.V., (2013), Development of Tamil Research, Meyyappan Publishing, Chennai, India.

Funding: NIL

Acknowledgement: NIL

Conflict of Interest: NIL

About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License